ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2117/57 - 2019 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2019.04.05
2117/57 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2013ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய 1820/11ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 242 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித்துண்டு களின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக் களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : 4-3/10/2013/UDA/40.
பிர.செ.இல. : මහ/ඉ/අත්/UDA/335.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019.04.01

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், மஹரகம மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 496 பி- கொட்டாவ நகரம் மற்றும் 531ஏ- பன்னிபிட்டிய தெற்கு கிராம அலுவலர் பிரிவில், கொட்டாவ பன்னிபிட்டிய தெபானம மற்றும் எரவ்வல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2018.12.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கொ 9397 ஆம் இலக்க ஆரம்ப முதற்சுவட்டு வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :

**1. துண்டு இல. 290 - பரண கொட்டாவ வீதியின் வரிபண இல. 477 மற்றும் 479 - விஸ்தீரணம் : சமார் 0.0008 ஹெக்டயார்**

வடக்கு : பரண கொட்டாவ வீதியின் வரிமதிப்பீட்டு இல. 477 மற்றும் 479 இன் பகுதிகள் மற்றும் வீதி ; கிழக்கு : துண்டு இல. 97 மற்றும் 291; தெற்கு : துண்டு இல. 291 ; மேற்கு: துண்டு இல. 291 மற்றும் பரண கொட்டாவ வீதியின் வரி மதிப்பீட்டு இல. 477 மற்றும் 479.

04-681